सत्यमेव जयते

**R.O.C.No.56119/2019/C3** **Dated : 03.07.2019**

From
Thiru.C.Kumarappan, B.Sc.,B.L.,
Registrar General,
High Court, Madras.

PRINCIPAL DISTRICT COURT
05 JUL 2019
MADURAI

To
xxxxx

Sir/Madam,

Sub : PS - Temporary employees in the post of Typist and Steno- typist Grade III - To be ousted from service and re-appointed on temporary basis - Government Order issued - Reg.

Ref : Government letter No.172/P/2019, Personnel and Administrative Reforms (P) Department, Secretariat, Chennai, dated 01.07.2019.

*******

I am to forward herewith the Government letter under reference cited for information and for necessary action, if any .

Yours faithfully,

For Registrar General 3/7/19

To
01. All the Principal District Judges/District Judges/ District Judge - Cum-Chief Judicial Magistrates. (w.e.)
02. The Principal Judge, City Civil Court, Chennai. (w.e.)
03. The Chief Judge, Court of Small Causes, Chennai. (w.e.)
04. The Presiding Officer, Industrial Tribunal, Chennai. (w.e.)
05. The Administrator General & Official Trustee of Tamil Nadu, Chennai. (w.e.)
06. The Presiding Officer, Labour Court, Chennai. (w.e.)
07. The Principal Special Judge, EC & NDPS Act Cases Court, Chennai. (w.e.)
08. The Chief Metropolitan Magistrate, Egmore, Chennai. (w.e.)
09. The City Government Pleader, City Civil Court Buildings, Chennai. (w.e.)

பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ப்பி) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
விகாரி, ஆனி – 16,
திருவள்ளுவர் ஆண்டு – 2050.

**அரசு கடித (நிலை) எண்.172/ப்பி/2019, நாள்: 01.07.2019**

HIGH COURT
RECEIVED
3 - JUL 2019
MADRAS

அனுப்புநர்
டாக்டர் சீ. ஸ்வர்ணா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் / தலைமைக் குற்றவியல் நடுவர்கள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
ஆணையர், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை–32.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை–104.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 1 / 5 / 9 / 35.

PRINCIPAL DISTRICT COURT
05 JUL 2019
MADURAI

ஐயா / அம்மையீர்,

பொருள்: பணியாளர் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தற்காலிக தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை–III – தற்காலிக பணி – பணியிடை முறிவு வழங்கி – மீண்டும் தற்காலிகமாக பணியமர்த்துவது குறித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

Subject

C/56119

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.147, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 14.09.2006.
2. அரசாணை (நிலை) எண்.205, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 09.11.2006.
3. அரசாணை (நிலை) எண்.102, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 29.01.2007.
4. அரசு கடித (நிலை) எண்.119, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 01.07.2008.
5. அரசாணை (நிலை) எண்.61, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 22.05.2009.

த.பி.பா

6. அரசு கடித (நிலை) எண்.78, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ப்பி) துறை, நாள் 25.06.2009.
7. அரசு கடித (நிலை) எண்.92, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 29.06.2010.
8. அரசு கடித (நிலை) எண்.81, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 08.07.2011.
9. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நேர்முகக் கடித எண்.3498/ப்பி எஸ்டிபி5/2009, நாள் 27.06.2012.
10. அரசு கடித (நிலை) எண்.109, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 10.07.2012.
11. அரசு கடித (நிலை) எண்.86/ப்பி/2013, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ப்பி) துறை, நாள் 08.07.2013.
12. அரசு கடித (நிலை) எண்.69/ப்பி/2014, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 07.07.2014.
13. அரசு கடித (நிலை) எண்.70/ப்பி/2015, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 02.07.2015.
14. அரசு கடித (நிலை) எண்.58/ப்பி/2016, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 22.06.2016.
15. அரசு கடித (நிலை) எண்.79/ப்பி/2017, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 21.06.2017.
16. அரசு கடித (நிலை) எண்.82/ப்பி/2018, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 27.06.2018.

*******

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் அரசுக் கடிதங்களின்மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணி ஆகியவற்றில் காலியாக இருந்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்பிட தனியானதொரு திட்டம் வகுக்கப்பட்டு, தகுதியான நபர்களை தெரிவு செய்ய தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து உரிய ஆணைகள் வெளியிடப்பட்டது.

த.பி.பா

இதைத் தொடர்ந்து இவர்களுக்கென பணிநடைமுறை விதிகள் பார்வை இரண்டில் கண்டுள்ள அரசாணையில் தனியே வகுக்கப்பட்டது.

3) பார்வை இரண்டில் காணும் அரசாணையில், வகுக்கப்பட்ட பணிநடைமுறை விதிகளில், விதி 2(b) மற்றும் 2(c) –ன்படி தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் தாங்கள் பணிநியமனம் பெற்ற நாள் முதல் ஓராண்டு காலம் வரை மட்டுமே பணயில் நீடிக்க முடியும் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்படும் தகுதி வாய்ந்த நபர்கள் வரும் நேர்வில், இத்தற்காலிக பணியாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்யப்படுவர் என்றும் அவர்களுக்கு பணி நடைமுறை விதிகள் வகுக்கப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது.

4) பார்வை மூன்றில் காணும் அரசாணையில், தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணியில், மேற்கொள்ளப்படும் தற்காலிக பணிநியமனத்திற்கு விலக்கு அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

5) பார்வை நான்கில் காணும் அரசுக் கடிதத்தில், மேற்கூறிய தற்காலிக தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகியோர்களது ஓராண்டு காலப்பணியினை 02.07.2008 பிற்பகல் முடிவுக்கு கொண்டுவந்து, 03.07.2008 அன்று ஒரு நாள் பணியிடைமுறிவு வழங்கி, மீண்டும் 04.07.2008 அன்று அவர்களை தற்காலிகமாக பணியமர்த்தி ஆணை வெளியிடப்பட்டது

6) பார்வை ஐந்தில் காணும் அரசாணையில், தற்காலிகமாக தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணி ஆகியவற்றில் நியமனம் செய்யப்பட்ட தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களை நிரந்தரமாக ஈர்த்துக்கொள்ளும்பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–4 அளவில் சிறப்புப் போட்டித் தேர்வினை நடத்திட உரிய ஆணை வெளியிடப்பட்டது

7) பார்வை ஆறு முதல் எட்டுவரை காணும் அரசுக் கடிதங்களில், மேற்கூறிய தற்காலிக தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களின் பணியினை 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒரு நாள் பணியிடைமுறிவு வழங்கி, மீண்டும் அவர்களை தற்காலிகமாக பணியமர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

8) பார்வை ஒன்பதில் காணும் அரசுக் கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட மேற்கண்ட சிறப்புப் போட்டித் தேர்வு 2009–ல் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் அனைவருக்கும் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலையில் பணியிடம் ஒதுக்கீடு செய்யும் பணி நிறைவுபெற்று சம்பந்தப்பட்ட அலகு / துறைத் தலைவர்களுக்கு தெரிவுப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்தது.

9) பார்வை பத்து முதல் பதினாறுவரை காணும் அரசுக் கடிதங்களில், மேற்கூறிய தற்காலிக தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களின் பணியினை 2012, 2013, 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒரு நாள் பணியிடைமுறிவு வழங்கி, மீண்டும் அவர்களை தற்காலிகமாக பணியமர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

10) மேற்கண்ட சிறப்புப் போட்டித் தேர்வில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற்றுள்ளோர் (எவரேனும் இன்னபிற காரணங்களுக்காக தொடர்ந்து தற்காலிகமாகப் பணியில் இருப்பின்), தோல்வி அடைந்தோர், விண்ணப்பித்து தேர்வு எழுதாதோர் மற்றும்

விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோர் ஆகியோர் நாளதுவரை சம்பந்தப்பட்ட துறைகளில் தற்காலிக அடிப்படையில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர் எனக் கருதப்படுவதால், அத்தகைய பணியாளர்களின் தற்காலிகப் பணியினை பார்வை இரண்டில் கண்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட பணிநடைமுறை விதிகளில், விதி 2(b) மற்றும் 2(c)–ன்படி, மேற்கண்ட பணியாளர்களின் ஓராண்டு கால தற்காலிகப் பணி 06.07.2018 முற்பகல் தொடங்கி 05.07.2019 பிற்பகல் முடிவுறும் நிலையில் அவர்களின் தற்காலிகப் பணிக்காலத்தினை 03.07.2019 பிற்பகல் முடிவுக்கு கொண்டுவந்து, 04.07.2019 அன்று ஒரு நாள் பணியிடைமுறிவு வழங்கி, 05.07.2019 முற்பகல் முதல் மீண்டும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்துமாறும், அதற்குரிய ஆணைகளைத் தனித்தனியே வெளியிடுமாறும், மேற்படி பணியிடைமுறிவு வழங்கப்பட்டோர் மற்றும் நாளது வரை தற்காலிகமாகத் தொடர்ந்து பணியிலிருப்போர் குறித்தான விவரங்களையும் பட்டியலிட்டு அரசுக்கு உடன் அனுப்பிவைக்குமாறும் அத்தகையோர் எவரும் இல்லை எனில் "வெற்றறிக்கை" அனுப்பிவைக்குமாறும் சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களுக்கு அரசு ஆணையிடுகிறது.

11) இத்தற்காலிகத் தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் எவரேனும் தங்களைப் பணிநீக்கம் செய்யக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கில் இடைக்காலத் தடை ஆணை ஏதேனும் பெற்று நாளதுவரை சம்பந்தப்பட்ட வழக்கு நிலுவையில் இருப்பின் அம்மனுதாரர்களுக்கு இப்பணியிடை முறிவு பொருந்தாது.

12) மேலும், பார்வை ஐந்தில் காணும் அரசாணையின்படி, இவ்வரசாணையானது சிறப்புப் போட்டித் தேர்வு 2009 –ல் தோல்வி அடைந்தோர், தேர்வுக்கு விண்ணப்பித்து தேர்வு எழுதாதோர் மற்றும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோர் ஆகியோருக்கு மட்டுமே பொருந்தும் எனவும் பணிநியமன அலுவலர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

1/7/2019

அரசு செயலாளருக்காக

நகல்:
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம்,
சென்னை–9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி. சீ –2) / (யு) துறை,
சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.